செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 321 நாள்: 2/6/17

என்2/10149/2017

# பத்திரிக்கைச்செய்தி

வேலூர் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சிறுபான்மையினர் மாணவர் மற்றும் மாணவியர்களுக்கென 33 பள்ளி விடுதிகளும் 11 கல்லூரி விடுதிகளும் ஆக மொத்தம் 44 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.

## 2) விடுதிகளில் மாணவ / மாணவியர் சேர்க்கை

பள்ளி விடுதிகளில் 4 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயில்கின்ற மாணவர் / மாணவியர்களும் கல்லூரி / பாலிடெக்னிக் / ஐடிஐ கல்விநிலையங்களில் பட்டப்படிப்பு, பட்டமேற்படிப்பு மற்றும் பாலிடெக்னிக் / ஐடிஐ படிப்புகளில் படிப்புகளில் பயிலும் மாணவ / மாணவியர்களும் சேரத் தகுதியுடையவர்கள் ஆவர். பிவ / மிபிவ / சிபா விடுதிகளில் அனைத்து வகுப்பை சார்ந்த மாணவ / மாணவிகளும் குறிப்பிட்ட விகிதாச்சார அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

## 3) விடுதிகளில் எவ்வித செலவினமும் இல்லாமல் பின்வரும் சலுகைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

அனைத்து விடுதி மாணவ / மாணவியருக்கு எவ்வித செலவினமும் இல்லாமல் உணவும் தங்கும் வசதியும் வழங்கப்படுவதோடு 10ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு விலையில்லா சீருடைகளும் 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியருக்கு சிறப்பு வழிகாட்டிகள் வழங்கப்படுகின்றன.

## 4) விடுதிகளில் சேருவதற்கான தகுதிகள்

பெற்றோர் / பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ.1,00,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும்: இருப்பிடத்திலிருந்து பயிலும் கல்வி நிலையத்தின் தொலைவு குறைந்தபட்சம் 8 கி.மீ.க்கு மேல் இருக்க வேண்டும். இந்த தூர விதி மாணவியருக்கு பொருந்தாது.

## 5) விண்ணப்பம் பெற வேண்டிய இடங்கள்

தகுதியுடைய மாணவ / மாணவியர் விண்ணப்பங்களை சம்மந்தப்பட்ட விடுதி காப்பாளர் / காப்பாளினிகளிடமிருந்தோ அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில்

உள்ள மாவட்டபிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்திலிருந்தோ இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.

**6) விண்ணப்பம் அளிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் இடங்கள்**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பள்ளி விடுதிகளை பொறுத்தவரை சம்மந்தப்பட்ட விடுதி காப்பாளர், காப்பாளினியிடம் அல்லது மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் 20.06.2017 க்குள்ளும் கல்லூரி விடுதிகளை பொறுத்தவரை சம்மந்தப்பட்ட விடுதி காப்பாளர் / காப்பாளினியிடம் அல்லது மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் 15.07.2017-க்குள்ளும் சமர்ப்பிக்க வேண்டும். மாணவ / மாணவியர்கள் விண்ணப்பிக்கும்பொழுது சாதி மற்றும் பெற்றோரது ஆண்டு வருமானம் குறித்த சான்றிதழ்கள் யாதும் அளிக்கத்தேவையில்லை. விடுதியில் சேரும் போது மட்டும் இச்சான்றிதழ்களை அளித்தால் போதுமானது.

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு விடுதியிலும் முகாம்வாழ் இலங்கைத்தமிழர்களின் குழந்தைகளுக்கென தனியே 5 இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

எனவே மாணவ / மாணவியர் அரசின் இச்சலுகைகளை பெற்று, பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஒம்/- சி.அ.ராமன்,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
வேலூர்.

//உத்திரவுப்படி//

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்,
வேலூர்-9.

மா.பி.ம.சி.ந.அ.
வேலூர்- 9. 1/6/17